www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

FWC

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
## நான்காம் தவணைப் பரீட்சை - 2023
# National Field Work Centre, Thondaimanaru.
## 4th Term Examination - 2023

| | | | | |
|---|---|---|---|---|
| கிறிஸ்தவ நாகரிகம் I<br>Christian Civilization I | Two Hours<br>Gr -13 (2023) | 49 | T | I |

**அறிவுறுத்தல்கள்:**

- **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக
- **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய விடைத்தாளில் புள்ளடி இடுக.

❖ **மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01) மொசப்பத்தேமியா நாகரிகம் எந்த நதிக்கரையோரத்தில் அமைந்துள்ளது?
1) நைல் 2) யார்மூக் 3) யோர்தான்
4) தைபர் 5) யூப்பிரடீஸ் - தைக்கிறீஸ்

02) உரோமை நகர் பல்வேறு கலாசாரங்களும், பண்பாடுகளும் சந்திக்கும் இடமாகத் திகழ்ந்தமைக்கான காரணம்.
1) பேரரசர் வழிபாடு 2) நெடுஞ்சாலை இணைப்பு 3) உரோமை நிர்வாகம்
4) பலம் வாய்ந்த உரோமைப் படைகள்
5) நீர் மூலங்கள் (ஆதாரம்)

03) விவிலியத்தின் இலத்தீன் மொழிபெயர்ப்பாகிய 'வுல்கத்தா' எந்த ஆண்டில் இடம் பெற்ற திரிதெந்து சங்கத்தில் அதிகார பூர்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.
1) கி.பி 1544 2) கி.பி 1054 3) கி.பி 1546
4) கி.பி 1500 5) கி.பி 1564

04) எகிப்திலிருந்து விடுதலை பெற்ற இஸ்ராயேலர் யாருடைய தலைமையில் போராடி பெலிஸ்திய சமவெளியைக் கைப்பற்றினர்.
1) சிம்சோன், தாவீது, சாலமோன் 2) மோசே, யோசுவா, சவுல்
3) கிதியோன், சாலமோன், எரோபோவாம் 4) சிம்சோன், சவுல், தாவீது
5) யோசுவா, இப்தா, தாவீது

05) பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A. பாலஸ்தீனாவின் பழம்பெரும் நகரங்களில் ஒன்றாக இது அமைந்துள்ளது.
B. எபிரோனுக்கு வடக்கே அமைந்துள்ளது.
C. துணி செய்தல், கண்ணாடித் தொழில் போன்றவை முதன்மையான தொழிலாகும்.
D. ஆபிரகாம் முதன்முதலாக இவ்விடத்தில் பலிப்பீடத்தை அமைத்தார்.
E. யோசுவா மக்களுக்கு தனது இறுதியுரையை ஆற்றினார்.
இவற்றுள் சமாரியா குறித்த சரியான கூற்றுக்களாவன.
1) A, B, C 2) A, B, E 3) A, C, E 4) A, D, E 5) B, C, D



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

06) கி.மு 1375 – 1366 இடைப்பட்ட காலத்தில் எகிப்தை ஆட்சி செய்த மன்னன் யார்?
1) 2ம் இராம்சேசு 2) 4ஆம் ஆமன் கோட்டடி 3) 3 ஆம் தோம்மாசு
4) யோசேப்பு 5) கலிகுலா

07) தாவீது அரசனின் ஆட்சியில் நாட்டின் வளர்ச்சியில் தொடர்பற்ற கருத்து யாது?
1) படைப்பலத்தை அதிகரிக்க பல படைத்தளபதிகள் நியமிக்கப்பட்டமை.
2) திரு இசைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.
3) உடன்படிக்கைப் பேழை எருசலேமுக்குக் கொண்டு வரப்பட்டது.
4) நாட்டினைப் பன்னிரெண்டு மாவட்டங்களாகப் பிரித்து ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒவ்வொரு ஆளுநரை ஏற்படுத்தினார்.
5) அரண்மனைப் பணியாட்கள். அலுவலர்கள் நியமிக்கப்பட்டன.

08) வட அரசில் ஆகாப்பின் ஆட்சிக்காலத்தில் பாகால் வழிபாட்டைக் கண்டித்து உண்மைக் கடவுளை எடுத்துக்காட்டி இறைவாக்கினர்.
1) எலியா 2) எலிசேயா 3) எசாயா 4) ஓசேயா 5) ஆமோஸ்

09) யாருடைய ஆட்சியில் கி.மு 63 இல் எருசலேம் கைப்பற்றப்பட்டுப் பாலஸ்தீனா உரோமையரின் ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டது?
1) பொம்பே 2) தீத்து 3) அலெக்ஸ்சாண்டர் 4) சைரஸ் 5) தொமீசியன்

10) எந்த நாட்டு மன்னனால் நெகேமியா யூதேயாவின் ஆளுநராக நியமிக்கப்பட்டார்?
1) பபிலோனியா 2) அசீரிய 3) பாரசீக 4) கிரேக்க 5) சிரிய

11) பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A. உரோமைப் பேரரசு ஆளுநர் பட்டத்தை வழங்கியது.
B. தலைமைக்குருக்களை தமது விருப்பப்படி மாற்றினார்.
C. கலிலேயா, பெரேயாவின் ஆட்சியாளன்.
D. கி.பி 6ம் ஆண்டில் வியன்னாவுக்கு நாடு கடத்தப்பட்டார்.
E. யூதர்களைத் திருப்திப்படுத்தக் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தினான்.
இவற்றுள் அர்க்கெலா குறித்த சரியான கூற்றுக்களாவன.
1) A, B, C 2) A, C, D 3) B, C, D 4) C, D, E 5) A, B, D

12) எருசலேம் ஆலயத்தில் பணியாற்றிய குருக்கள் சார்ந்திருந்த கோத்திரமாவது.
1) யூதா 2) பெற்சமின் 3) ரூபன் 4) சிமியோ 5) லேவி

13) பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
A. இஸ்ராயேலர் பெத்கெல், செக்கேமில் பலிப்பீடங்களை அமைத்து வழிபட்டனர்.
B. கி.மு 18 இல் யூதேயா மன்னன் பெரிய ஏரோதாவால் எருசலேம் ஆலயம் புனரமைக்கப்பட்டது.
C. இயேசுவின் காலத்தில் 400 தொடக்கம் 500 வரையான தொழுகைக் கூடங்கள் இருந்தமை கணிக்கப்பட்டது.
D. யூதப் பொதுச் சங்கத்தில் 71 பேர் அங்கம் வகிக்கின்றனர்.
E. அரசியல் இலாபத்திற்காக சதுசேயர் ஆட்சியாளருடன் ஒன்றிணைந்து செயற்பட்டனர்.
மேல்வருவனவற்றுள் தவறான கூற்றுக்கள்
1) A யும் D யும் 2) B யும் C யும் 3) D யும் E யும் 4) B யும் D யும் 5) A யும் B யும்

14) இவர்கள் செமித்திய இன மொழியானதைப் பேசியதால் ஆற்றைக் கடந்தவர்கள் என்ற கருத்தைக் கொண்டவர்கள் யார்?
1) ஏழைகள் 2) பபிலோனியர் 3) எபிரேயர் 4) சமாரியர் 5) பாரசீகர்

15) கிரேக்கரின் ஆட்சிக் காலத்தில் யூதர்களுக்காக எழுதப்பட்ட சட்ட ஒழுங்கு நூல்
1) மிஸ்னா 2) தார்கும் 3) வல்கேட் 4) தால்மூட் 5) தெபிலின்



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

16) இயேசுவின் காலத்தில் யூத திருமணம் தொடர்பான பொருத்தமற்ற கூற்று.
   1) திருமண ஒப்பந்தம் செய்து ஒரு வருடத்திற்குப் பின்னர் திருமணம் நிறைவேறும்.
   2) மணமுடிக்கும் பெண்ணுக்காக அவளின் தந்தைக்குப் பணமோ உழைப்பைப் பரிசாக வழங்குதல்.
   3) திருமணம் முடிந்ததும் தனிக்குடித்தனத்திற்கு அமர்த்தப்படுவர்.
   4) திருமணமான பின் கணவனின் நடத்தையில் தவறு ஏற்படின் மனைவி மணவிலக்கு செய்ய உரிமை பெற்றிருந்தார்.
   5) திருமண வீட்டிற்கு அழைக்கப்பட்டவர்களுக்கு ஆடை வழங்கப்பட்டது.

17) முதற் தொழுகைக் கூடங்கள் ஆரம்பிக்கப்பட்ட இடம்.
   1) பபிலோனியா 2) சமாரியா 3) பெத்தானியா 4) எகிப்து 5) எபிரோன்

18) யூதர்களின் சமய மரபுகளில் ஓய்வு நாள் அனுசரித்தல் முக்கியமானதெனில்
   1) வெள்ளிக்கிழமை மாலை ஆரம்பமாதல் 2) ஒரு வேலையும் செய்யாமல் இருத்தல்
   3) தூரம் தேசம் செல்லுதல் 4) மனமாற்ற நாள்
   5) உடன்படிக்கையின் சின்னம்

19) யூதர்களின் விழாக்களில் மிகப் பழமையான விழாவாக அமைவது.
   1) பாஸ்காத்திருவிழா 2) கூடாரத் திருவிழா 3) பெந்தக்கோஸ்தே விழா
   4) பாவப் பரிகார விழா 5) புளியாத அப்பத்திருவிழா

20) "ஹனுக்கா" என்ற எபிரேய மொழியின் பொருளாக அமைவது.
   1) புளியாத 2) விலகியிருத்தல் 3) தொடங்குதல் 4) முடித்தல் 5) முதற்கனி

21) "அனைத்திற்கும் மேலாக அவரது ஆட்சியையும் அவருக்கு ஏற்புடையவற்றையும் நாடுங்கள். அப்போது இவையனைத்தும் உங்களுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும்" (மத் 6: 33) இயேசுக் கிறிஸ்து இவ்வாறு போதித்தது.
   1) மலைப் பொழிவின் போது 2) செபக் கூடத்தில் 3) கலிலேயாக் கடற்கரையில்
   4) சீடர்களை அழைத்த போது 5) சிலுவையில் தொங்கிய போது

22) நற்செய்தியிலுள்ள உண்மைச் செல்வமும் அதனைத் தேடலின் விளைவுடன் தொடர்புபட்ட கூற்று யாது?
   1) மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்
   2) அனைத்திற்கும், மேலாக அவரது ஆட்சியையும் அவருக்கு ஏற்புடையதையும் நாடுங்கள்
   3) உனக்குப் பிடிக்காத எதையும் பிறருக்குச் செய்யாதே
   4) நீ திருந்தும் போது உலகம் தானாகத் திருந்தும்.
   5) உன் முழு மனதோடு கடவுளை அன்பு செய்.

23) இறையாட்சியின் தன்மைகளை விளக்குவதற்கு இயேசு பயன்படுத்திய உவமைகளுள் பொருத்தமற்றது.
   1) புளிப்புமாவு 2) கடுகு விதை 3) விதைப்பவன் 4) நல்ல சமாரியன் 5) புதையல்

24) பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
   A. இறையாட்சி நெருங்கி விட்டது என்பதன் அடையாளம்.
   B. மக்களுடைய அன்றாட வாழ்க்கை நிகழ்வை எடுத்துரைத்தல்.
   C. பலர் இயேசுவைப் பின் தொடருவார்கள் என்ற நோக்கில் நிகழ்த்தப்பட்டது.
   D. இறை நம்பிக்கையின் அடிப்படையில் நிகழ்த்தப்பட்டது.
   E. நற்செய்தியை மக்கள் எளிதாக ஏற்றுக் கொள்வதற்கு.
   இவற்றுள் இயேசுவின் புதுமைகள் குறித்து சரியான கூற்றுக்களாவன.
   1) A, B, C 2) B, C, D 3) A, D, E 4) C, D, E 5) B, D, E

25) இறையாட்சிப் பணிக்கு உளத்தூய்மை தேவை என்பதை உணர்த்தும் நிகழ்வு எது?
   1) ஐயாயிரம் பேருக்கு உணவளித்தல் 2) உடல் நலமற்றவரைக் குணமளித்தல்
   3) இறந்தோரை உயிர் பெறச் செய்தல். 4) இயேசு சமாரியப் பெண்ணுடன் உரையாடுதல்
   5) பாதங் கழுவுதல்



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

26) இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்புத் தொடர்பாக மத்தேயு நற்செய்தி வெளிப்படுத்துவது.
   1) இயேசுவின் உயர்ந்த பட்ச அன்பும், இறைமாட்சியின் வெளிப்பாடும்.
   2) இருளின் ஆதிக்கத்தின் மேல் கொண்ட வெற்றியின் அடையாளம்.
   3) மீட்பின் வெளிப்பாடு.
   4) துன்புறுத்தலின் வெளிப்பாடு
   5) அலகையின் மேல் கொண்ட வெற்றியின் வெளிப்பாடு

27) சீடத்துவப் பற்றிய இயேசுவின் படிப்பினைகளை எடுத்துக் கூறும் நூல் எது?
   1) புனித மாற்கு 2) புனித மத்தேயு 3) புனித லூக்கா
   4) புனித யோவான் 5) திருத்தூதர் பணி

28) யோவான் நற்செய்தியின் படி இயேசுவின் மரணத்திற்குப் பொறுப்பானவர்கள்.
   1) உரோமையர்கள் 2) யூதர்கள் 3) பரிசேயர்கள்
   4) சதுசேயர் 5) எசேனியர்கள்

29) "ஐயம் தவிர்த்து நம்பிக்கை கொள்" என இயேசு கூறியது.
   1) பேதுருவிற்கு 2) யோவானுக்கு 3) மரியாவுக்கு
   4) சக்கேயுவிற்கு 5) தோமாவவிற்கு

30) "இறுதி நாளில் எல்லோர் மீதும் என் ஆவியைப் பொழிவேன்" எனும் இறைவாக்கு எந்த இறைவாக்கினருடையது?
   1) யோனா 2) யோபு 3) எசக்கியேல் 4) யோவேல் 5) எசாயா

31) தொடக்க கிறிஸ்தவர்களின் மூன்று பண்புகளைக் கொண்ட தெளிவு யாது?
   1) குழு வாழ்வு, அந்நிய மொழிகளில் பேசுதல், இறைவேண்டல்.
   2) பகிர்ந்து வாழ்தல், குழும வாழ்வு, பாடுகளைத் தியானித்தல்.
   3) இறைவேண்டல், நட்புறவுடன் உறவாடுதல், பகிர்ந்து வாழுதல்.
   4) நட்புடன் உறவாடுதல், பாடுகளைத் தியானித்தல். இறைவேண்டல்.
   5) இறைவார்த்தையைக் கேட்டல், அந்நிய மொழிகளில் பேசுதல், இறைவேண்டல்.

32) முதன் முதலில் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தியவர்.
   1) பவுல் 2) நீரோ 3) தொமீசியன் 4) திராயன் 5) வலேரியன்

33) புறவினத்தவரின் இறைவாக்கினர் கொண்ட தொகுதி எது?
   1) பவுல், கொர்னலேயு 2) எசாயா, ஆமோஸ் 3) எலியா, ஒசேயா
   4) எரேமியா, மீக்காஸ் 5) எசாயா, எரேமியா

34) பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.
   A. சீலா, நிமோத்தேயு, லூக்கா
   B. கிறிஸ்தவ சமூகங்களை அமைத்து அங்கு காணப்பட்ட பிணக்குகளைத் தீர்த்தல்.
   C. தெய்வங்கள்ளே நம்மிடையே இறங்கி வந்துள்ளனர்.
   D. மிலேத்தில் முப்பரிடையே பரியாவிடை பெறுதல்.
   E. யெருசலேமிற்குச் செல்லுதல்.
   இவற்றுள் புனித பவுலின் மூன்றாம் மறைத்தூதுப்பயணம் தொடர்பான சரியான கூற்றுக்கள்.
   1) A, B, C 2) B, D, E 3) C, D, E 4) A, C, D 5) B, C, D



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

35) பவுலின் திருமுகங்களில் 'காரிஸ்மா' எனும் பதம் குறிப்பதாவது.

1) கிறிஸ்தவ ஒன்றிப்பு
2) கிறிஸ்துவின் இரண்டாம் வருகை
3) கடவுளின் அருட் கொடை
4) இயேசுவின் தன்னல மறுப்பு
5) திருச்சபைகளுக்கிடையிலான சகோதரத்துவம்

36) யூத கலாபனையின் விளைவுகளில் பொருத்தமற்ற கூற்று எது?

1) எருசலேமில் ஒளிந்திருந்த கிறிஸ்தவர்கள் சிதறுண்டு வெளியேறி சென்ற இடங்களில் நற்செய்தியை அறிவித்தமை.
2) பவுலின் மனமாற்றமும், அவரது மறைத்தூதுப் பணிகளும் கிறிஸ்தவ வளர்ச்சியடையச் செய்தது.
3) யூதர்களும் மனம் மாறிக் கிறிஸ்தவ மதத்தைப் பின்பற்றினர்.
4) தப்பறையான பேதங்களும், இறைமறுப்புக் கொள்கைகளும் பரவியது.
5) கிறிஸ்தவம் புறவினத்தார் மத்தியில் செல்ல வழி வகுத்தல்.

37) மன்னன் கல்லேரியு "கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தக் கூடாது" எனக் கட்டளை பிறப்பித்த ஆண்டு?

1) கி.பி 312  2) கி.பி 313  3) கி.பி. 311  4) கி.பி 380  5) கி.பி 300

38) "கத்தோலிக்க திருச்சபை" எனும் பெயரை முதன் முதலில் பயன்படுத்தியவர்?

1) இஞ்ஞாசியார்  2) சிமியோன்  3) பெலவேந்திரர்  4) யுனிதின்  5) சிம்போரின்

39) தூய ஆவி குறித்துப் பேசுகின்ற ஆரம்ப காலத் தப்பறையான போதனை

1) நெஸ்தோரிய வாதம்
2) ஆரிய வாதம்
3) பெலாஜித வாதம்
4) மசதோனிய வாதம்
5) இயுக்திக்கேய வாதம்

40) "திருத்தூதரின் போதனையின் நிரூபணம்" என்ற நூலை எழுதியவர்?

1) ஓரிஜன்
2) இரனேயுஸ்
3) ஜஸ்ரின்
4) அலெக்சாந்திரிய கிளமென்ற்
5) தேர்த்தூலியன்

41) பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

A. கிறிஸ்தவ துறவாழ்வின் நிறுவுனர்.
B. துறவற குழும வாழ்வை ஆரம்பித்தவர்.
C. செபமும் வேலையையும் விருதுவாக்காகக் கொண்டனர்.
D. நைல் நதிக்கரையில் எட்டு மடங்களை அமைத்தனர்.
E. வேலை, வேதாகம வாசிப்பு, தியானம், செப வாழ்வு போன்ற ஒழுங்கு விதிகளைத் எழுதிக் கொடுத்தார்.

இவற்றுள் தூயு பக்கோடியுள் என்பவருன் தொடர்புடைய சரியான கூற்றுக்கள்.

1) A, B, C  2) A, C, D  3) B, D, E  4) C, D, E  5) B, C, D

42) திருச்சபை விரைவில் அயர்லாந்தில் பரவுவதற்குச் சுதேச குருக்களின் அவசியத்தை உணர்த்தியவர்?

1) தூய கொலம்பா
2) தூய கொலம்பான்
3) தூய கிறகோரியார்
4) தூய பற்றிக்
5) தூய பொனிபாஸ்

Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

43) பீற்றர் வால்டோ என்பவர்.

1) ஒரு திருச்சபைத் தந்தையர்
2) ஒரு டொமினிக்கன் துறவி
3) இரவலர் சபையின் முன்னோடி
4) கீழைத்தேய துறவற வாழ்வின் தந்தை
5) ஓர் இத்தாலியத் துறவி

44) திருச்சபை வரலாற்றில் மத்திய யுகக் காலமாகக் கருதப்படுவது?

1) கி.பி 800 – 1000
2) கி.பி 700 – 1500
3) கி.பி 800 – 1500
4) கி.பி 600 – 1200
5) கி.பி 800 – 1400

45) நற்கருணையில் கிறிஸ்துவின் பிரசன்னம் இல்லை அது ஒரு நினைவு கூரும் அடையாளம் மட்டுமே எனக் கூறியவர்.

1) பிரான்சிஸ்
2) சுவிங்ளி
3) கல்வின்
4) மாட்டீன்லூதர்
5) தோமஸ் முன்ற்சர்

46) ஐரோப்பிய நாகரிகம் உருவாகுவதற்கு அளப்பெரிய பங்களிப்புச் செய்த துறவற சபை

1) தூய பெனடிற் துறவற சபை
2) டொமினிக்கன் துறவற சபை
3) பிரான்சிஸ்கன் துறவற சபை
4) இயேசு சபை
5) கப்புச்சின் சபை

❖ **பின்வரும் அட்டவணையைப் பயன்படுத்தி 47 தொடக்கம் 50 வரையிலான வினாக்களுக்கு விடை தருக.**

| | | | | |
|---|---|---|---|---|
| **A**<br>கி.பி 202 - 211 | **B**<br>பிளேற்றோ | **C**<br>லூசியன் | **D**<br>கி.பி 1189 - 1192 | **E**<br>தூய இரேனியுஸ் |
| **F**<br>ஒரிஜன் | **G**<br>அரிஸ்ரோட்டில் | **H**<br>திருத்தந்தை 8ம் கிறகோரியார் | **I**<br>கி.பி 1217 - 1221 | **J**<br>பெலிசித்தா |

47) ஐந்தாவது உரோமைய கலாபனையுடன் தொடர்புடைய சோடி

1) A, H
2) C, J
3) E, J
4) C, E
5) A, F

48) அலெக்சாந்திய மறைக்கல்விக் கூடத்துடன் தொடர்புடைய சோடி எது?

1) B, G
2) F, G
3) C, E
4) A, H
5) B, F

49) அந்தியோக்கிய மறைக்கல்விக் கூடத்துடன் தொடர்புடைய சோடி எது?

1) F, G
2) B, C
3) C, H
4) C, G
5) G, J

50) மூன்றாவது சிலுவைப் போருடன் தொடர்புடைய சோடி எது?

1) D, H
2) A, H
3) H, I
4) A, I
5) C, H

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

NFWC

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
## நான்காம் தவணைப் பரீட்சை - 2023
# National Field Work Centre, Thondaimanaru.
## 4th Term Examination - 2023

| | | | | |
|---|---|---|---|---|
| கிறிஸ்தவ நாகரிகம் II<br>Christian Civilization II | Three Hours<br>Gr -13 (2023) | 49 | T | II |

**அறிவுறுத்தல்கள் :**

- பகுதி **I** இலிருந்து **இரண்டு** வினாக்களையும், பகுதி **II** இலிருந்து **மூன்று** வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

### பகுதி – I

01) (i) பாலஸ்தீனா நாட்டை ஆக்கிரமித்த பேரரசுகள் நான்கைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) கலிலேயாப் பகுதியின் புவியியல் அம்சங்கள் நான்கினைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) இஸ்ராயேல் மக்களை வழிநடத்திய நீதித்தலைவர்களின் பணிகளை விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iv) எகிப்து மற்றும் மொசப்பத்தேமிய நாகரிகங்கள் யூத கலாசாரத்தில் எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்தின என்பது பற்றி விளக்குக. (08 புள்ளிகள்)

02) (i) தொடக்கக் கிறிஸ்தவர்களின் குழும வாழ்விலிருந்து இன்றைய கிறிஸ்தவர்கள் பெற்றுக் கொள்ளக் கூடிய படிப்பினைகள் நான்கினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) இயேசுக்கிறிஸ்து யூதக் கலாச்சார மதிப்பீடுகளைப் பின்பற்றி வளர்ந்தார் என்பதற்கான காரணிகள் நான்கினைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) யூத கல்வி முறையின் இயல்புகளை விபரிக்குக. (06 புள்ளிகள்)

(iv) இயேசுவின் காலத்தில் யூதர்கள் மத்தியில் வழக்கிலிருந்த சுத்திகரிப்புச் சடங்கு, பாவப்பரிகாரச்சடங்கு என்பன குறித்துக் கலந்துரையாடுக. (08 புள்ளிகள்)

03) (i) மத்திய காலத் திருச்சபையின் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட சமயப் பின்னனிகள் நான்கினைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) சிலுவைப் போர் இயக்கம் வளர்ச்சியடையத் துணைநின்றக் காரணிகள் நான்கினைக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) இரவலர் துறவற சபைகளின் தோற்றத்திற்கான காரணம் குறித்து விபரிக்குக. (06 புள்ளிகள்)

(iv) ஐரோப்பிய பழங்குடியினர் படிப்படியாகத் திருச்சபைக்கு மதம் மாறியமைக்கான காரணிகள் குறித்துக் கலந்துரையாடுக. (08 புள்ளிகள்)



agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

## பகுதி II

04) (i) திருவிவிலிய மொழிபெயர்ப்பில் கிரேக்க, இலத்தீன் மொழித்தாக்கம் குறித்து விபரிக்குக. *(10 புள்ளிகள்)*

(ii) கிரேக்க மெய்யியல் சிந்தனைகள் புனித பவுலினதும் யோவானினதும் எழுத்தாக்கங்களில் செல்வாக்குச் செலித்தியுள்ளன. இக் கூற்றை விபரிக்குக. *(10 புள்ளிகள்)*

05) (i) யோவான் நற்செய்தியின் அடிப்படையில் உயிர்த்த இயேசுவின் தரிசனங்களைக் குறிப்பிட்டு அவற்றில் ஒன்றை விபரிக்குக. *(10 புள்ளிகள்)*

(ii) இயேசுக் கிறிஸ்துவின் உயிர்ப்பு கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படை நம்பிக்கையாகும் என்பது குறித்துக் கலந்துரையாடுக. *(10 புள்ளிகள்)*

06) (i) கிறிஸ்தவத்தின் பரம்பலுக்கு புனித பவுலின் தூதுரைப் பயணங்கள் முக்கிய கருவிகளாக விளங்கின என்பது பற்றிக் கலந்துரையாடுக. *(10 புள்ளிகள்)*

(ii) நற்செய்தி அறிவிப்பதில் புனித பவுலின் வாழ்விலிருந்து நீர் பெற்றுக் கொள்ளக் கூடிய வழிகாட்டுதல்களை ஐந்து எடுத்துக் காட்டுக்களுடன் விளக்குக. *(10 புள்ளிகள்)*

07) (i) கிறிஸ்தவ குடும்ப வாழ்வு தொடர்பாக கணவன் மனைவிக்கிடையே நிலவவேண்டிய உறவு குறித்து புனித பவுலின் படிப்பினைகள் ஐந்தினை எபேசியர் திருமலிடம் ஒளியில் விளக்குக. *(10 புள்ளிகள்)*

(ii) ஆரோக்கியமானதும், மகிழ்ச்சிகரமான குடும்பவாழ்வுவினைக் கட்டியெழுப்புவதில் பெற்றோர், பிள்ளைகளின் வகிபாகம் பற்றி விளக்குக. *(10 புள்ளிகள்)*

08) (i) முதல் மூன்று நூற்றாண்டுகளிலும் கிறிஸ்தவம் வேகமாக வளர்ச்சியடைவதற்கு துணை நின்ற காரணிகள் ஐந்தினை விபரிக்குக. *(10 புள்ளிகள்)*

(ii) திருச்சபையின் வீரவரலாற்றுக் காலத்தில் துன்புறுத்தலின் மத்தியில் கிறிஸ்தவர்கள் சாட்சி வாழ்விலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய வழிகாட்டுதல்களை விபரிக்குக. *(10 புள்ளிகள்)*

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk



agaram.lk